செ.வெ.எண்: 32 நாள்:13.11.2019

தமிழ்நாடு மாநில தேர்தல் தலைமை ஆணையர் டாக்டர்.ஆர்.பழனிசாமி, இ.ஆ.ப., (ஓய்வு) அவர்கள், தூத்துக்குடி மாநகராட்சியில் உள்ளாட்சி தேர்தலுக்கு பயன்படுத்தப்பட உள்ள மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் படிவங்களை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

---

தூத்துக்குடி மாநகராட்சியில் தமிழ்நாடு மாநில தேர்தல் தலைமை ஆணையர் டாக்டர்.ஆர்.பழனிசாமி, இ.ஆ.ப., (ஓய்வு) அவர்கள், உள்ளாட்சி தேர்தலுக்கு பயன்படுத்தப்பட உள்ள மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்களை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின் போது, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள், மாநகராட்சி ஆணையர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ளாட்சி தேர்தலுக்கு பயன்படுத்தப்படும் படிவங்களை நேரில் சென்று பார்வையிட்டு, வாக்காளர் பட்டியல் வைக்கப்பட்டுள்ள பகுதி, உள்ளாட்சி தேர்தலின்போது பயன்படுத்தப்படவுள்ள படிவங்கள் உள்ள பகுதிகளையும் ஆய்வு செய்தார். மேலும், மின்னனு வாக்குப்பதிவு இயந்திரத்தில் பயன்படுத்தப்படும் புதிய பேட்டரிகள் உள்ள பகுதியையும் சென்று பார்வையிட்டார். அதனை தொடர்ந்து, பழைய மாநகராட்சி அலுவலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள நகர்ப்புற பகுதியில் பயன்படுத்தப்படவுள்ள மின்னனு வாக்குப்பதிவு இயந்திரத்தை பார்வையிட்டார். மேலும் மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்கள் நல்ல நிலையில் உள்ளதா என ஆய்வு செய்ய அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

ஆய்வின் போது, கூடுதல் இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திரு.ஆனந்தராஜ், சார் ஆட்சியர் திரு.சிம்ரோன் ஜித் சிங் கலோன்,இ.ஆ.ப., மாநகராட்சி நிர்வாக பொறியாளர் திரு.ரூபன் சுரேஷ் பொன்னையா, உதவி ஆணையர் திரு.சரவணன் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம்.